[3rd September 1958

ஒரே நாளில் டோகனேயும் பணத்தையும் வாங்குவதற்கு ஏற்ற வகையில் ஸ்டேட் பாங்குக்கு உடனுக்குடன் தகவல் தெரிவிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கஷ்டத்தைத்தான் மற்ற கனம் அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். இதை நிவர்த்திக்க என்ன ஏற்பாடு செய்வது என்று யோசிக்கப்படும்.

Poramboke lands

*15 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி ஜில்லா, விளவங்கோடு தாலூகா, கலியல் ரேஞ்சு குலப்பாரையிலுள்ள புறம்போக்கு நிலங்களில் சாகுபடி செய்துகொண்டிருந்த விவசாயிகள் எவரேனும் பனிச்சமுட்டிலுள்ள கான்வெண்ட் அதிகாரிகளால் வெளியேற்றப்பட்டார்களா ?

(ஆ) விவசாயிகள் சட்டத்தை மீறி நிலங்களை ஆக்கிரமித்தார்கள் என்பதற்காகவும் அத்துமீறி அவற்றில் பிரவேசித்தார்களென்பதற்காகவும் தொடரப்பட்ட வழக்குகளில் எத்தனை பைசலாகமல் உள்ளன ?

(இ) மேற்படி புறம்போக்கு நிலங்களை மீண்டும் ஸர்வே செய்து அவற்றை நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு ஒப்படை செய்வதற்கான உத்தேசம் ஏதாவது இருக்கிறதா ?

(ஈ) அப்படியானுல், அதுபற்றி விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) No encroachment cases have been filed for unauthorised occupation in the area.

(*c*) & (*d*) There is no proposal to resurvey the poramboke land in question at present.

Green fodder

* 16 *Q*.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Municipalities where drainage water is used to raise green fodder; and

(*b*) whether the Government propose to extend the scheme to all Municipalities?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Thirteen including the Corporation of Madras.

(*b*) This question is under consideration.

SRI S. LAZAR : இப்படிப்பட்ட சாக்கடைகள் திருச்சிபோன்ற நகரங்களில் காவிரி ஆற்றில் கலந்துவிடுவதன் காரணமாக மக்கள் மிகவும் அவதிப்படுகிருர்கள். ஆகையால் திருச்சி போன்ற நகரங்களிலாவது இந்தத் திட்டத்தை அமல் நடத்த சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் திட்டம் இப்போது ஸ்ரீரங்கத்தில் அமலுக்கு வந்திருக்கிறது. இதை திருச்சியில் கொண்டு வருவதுபற்றி பிற்பாடு ஆலோசிக்கப்படும்.